# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர்ஆண்டு 2029 தை 30வியாழக்கிழமை (12-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்67

# 2 தமிழ்க் கட்சிகள் நேற்று யாழ். நகரில் மோதல்!

## நிலைமையைச் சமாளிக்கப் படையினர் வேட்டு!!

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். நகரில் வேம்படி வீதியில் நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் இரு தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களிடையே கைகலப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ஒரு தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் வேம்படி வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம், மற்றைய கட்சி உறுப்பினர் ஒருவருடன் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு பின்னர் அது கைகலப்பாக மாறியதாகத் தெரியவந்தது.

இக் கைகலப்பில் மோட்டார் சைக்கிளில் சென்ற தமிழ்க்கட்சி உறுப்பினர் இருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொல்லு, கத்தி போன்றவை இக் கைகலப்பில் பாவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் கைகலப்பின் போது படையினர் வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இச் சம்பவங்களால் நகரப் பகுதியில் நேற்று மாலை சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (இ-3)

## புலிகளின் ஆட்டலறி பிரிவில் முன்னாள் ராணுவ கப்டன்!

### முல்லைத்தீவு தாக்குதலில் பிடிபட்டவர்!!

கொழும்பு, பெப். 12

1996 ஆம் ஆண்டு முல்லைத் தீவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகள்வசம்வீழ்ந்தபோது அம்முகாமின் ஆட்லறி பிரிவின் தலைமை அதிகாரியாக இருந்த முன்னாள் இராணுவக் கப்டன் ஒருவரே பரந்தன், கிளிநொச்சிப் பகுதியில் தற்போது படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் ஷெல் தாக்குதல்களுக்குத் தலைமைவகிப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பரந்தன் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற சண்டையின் போது காயமுற்று தற்போது இராணுவத்தினரின் பாதுகாப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினரே இத்தகவலைக் கூறியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கனகராயன்குளம் பகுதியிலிருந்து ராணுவத்தினர் நகர்வதற்கு முயற்சி

## புலிகள் எதிர்த்து கடும் தாக்குதல்

வவுனியா, பெப்ரவரி 12

மாங்குளத்துக்கு வடக்கே கனகராயன் குளத்தில் நிலை கொண்டுள்ள 'வெற்றி உறுதி' படையினர் நேற்று வடக்கு நோக்கி நகருவதற்கு முயன்றனர். அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கனகராயன் குளம் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்கள் குறித்த சேத விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

அதேசமயம் வெற்றிஉறுதி படையினர் நேற்று மாங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் சட்டத்தரணி ஒருவர் கொம்பனித்தெருவில் கைது!

### மனித உரிமைகள் சங்கத்தைச் சேர்ந்தவர்

கொழும்பு, பெப். 12

கொம்பனித்தெரு விமானப்படைச் சோதனை நிலையத்தில் தமிழ் சட்டத்தரணி ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

அந்தச் சோதனை நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்ட மனித உரிமைகள் அபிவிருத்திக்கான வழக்கறிஞர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வார இறுதியில்

கொழும்பு, பெப். 12

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர)பரீட்சை முடிவுகள் வார இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 29 ஆம் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகமாக நியமனம் பெற்ற ஏ.எம். ஆர்.பி. அமரக்கோன் இந்த முடிவை விரைவாக வெளியிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கான பரீட்சை முடிவை உடன் அனுப்ப பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

## ரெலோ உறுப்பினர் மீது சூடு!

மட்டக்களப்பு, பெப். 12

மட்டக்களப்பு ஆரையம்பதியில் நேற்று முன்தினம் இரவு இரு ரெலோ உறுப்பினர்கள் சுடப்பட்டனர்.

சீனித்தம்பி ரஞ்சன், சிவபாலசுந்தரம் மோகனதாஸ் ஆகிய இருவரும் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டது.

புலிகளே இதனைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## 20 ஆம் திகதி வரை படையினருக்கு அவகாசம்

கொழும்பு, பெப். 12

படையிலிருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்து சேர்ந்து கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இம்மாதம் 20 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி உள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 26 இலங்கைத் தமிழர் உட்பட 33 பேர் பெல்ஜியத்தில் கைது

### பிரிட்டனுக்குச் செல்ல இருந்தனராம்

லண்டன், பெப். 12

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழையத் திட்டமிட்டிருந்த 26 இலங்கைத் தமிழர்கள் உட்பட 33 பேர் பெல்ஜியம் துறைமுகத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பிரான்ஸிலிருந்து பெல்ஜியம் ஊடாக பிரிட்டன் செல்லும் லொறி ஒன்றில் இவர்கள் மறைந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் ஒரு பெண் அவரது இரு ஆண்பிள்ளைகள் ஆகியோரும் அடங்குவர். (இ-21)

## வந்தாறுமூலையில் நேற்று கிளைமோர் தாக்குதல்

### 2 படையினர் பலி; 22 பேர் காயம்

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி வந்தாறுமூலையில் நேற்று நண்பகல் விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவை நோக்கிச் சென்ற இராணுவ வாகனத் தொடர் அணி மீதே கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரு கடற்படையினர் உட்பட 22 படையினரும் பஸ் சாரதியும் இத்தாக்குதலில் காயமடைந்தனர்.

பஸ் பலத்த சேதமடைந்தது. இச்சம்பவத்தின் போது அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த யுவதி உட்பட பொது மக்கள் மூவர் சிறு காயமடைந்தனர். (இ-21)

# புலிகள் - படையினர் பரஸ்பரம் ஷெல் வீச்சு!

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே கடும் ஷெல் வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் மதியம் கிளிநொச்சி, பரந்தன், [illegible] பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் கிளிநொச்சியையும் அதனை அண்டிய பகுதிகளையும் நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தினர். (இ-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ராஜேஸ்வரராணி சுந்தரராஜா

திருமதி ராஜேஸ்வரராணி சுந்தரராஜா அவர்கள் 10-2-98 அன்று காலமானார்.

அன்னார் திரு. சுந்தரராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி திருராஜசிங்கத்தின் (ஓய்வு பெற்ற அதிபர்) அன்பு மகளும், மடு மலர்ராஜகுலராணி (கனடா), காலஞ்சென்ற அன்ரன் ராஜசெல்வம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரஞ்சிதராணி, பிறின்ஸ் ராஜேந்திரசிங்கம், திவ்வியராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணானந்தன் (கணக்காளர், கனடா), சித்ரஞ்சி ஆகியோரின் அன்பு மாமியாரும், மாக்கஸ், கிறிஸ்டீனா, குவின்ரன், சாம்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி த. திவ்வியராணி
(சகோதரி)

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(53321)

## கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

அளவெட்டி வடக்கு, நாத்துப்பிலாவடியைச் சேர்ந்தவரும், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் முன்னாளில் பணியாற்றியவருமாகிய கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் 11-02-98 இல் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயசாந்தி, ஜெயசீவி, ஜெயந்தினி (சூட்டா) [அருணோதயாக் கல்லூரி ஆசிரியை], இன்பமதி (ஆசிரியை, கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கணேசராஜா, பாலசுப்பிரமணியம், ஈஸ்வரன், பாலசுந்தரம் ஆகியோரின் மாமனாரும், தயாபரன், சர்வாஜினி, சுதாபரன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-2-98) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அளவெட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சீ. பாலசுப்பிரமணியம்
(மருமகன்)

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(53329)

## திருமதி கிரேஸ் நல்லம்மா ஆசீர்வாதம்

நாவன்மார்கட்டை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கிறேஸ் நல்லம்மா ஆசீர்வாதம் அவர்கள் கடந்த 07-02-98இல் ஹட்டனில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரான்சிஸ் ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் ஆனந்தசிகாமணி, ஆனந்தராணி, ஆனந்தநாயகம், ஆனந்ததாஸ், ஆனந்தநாதன், ஆனந்தவதனா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கெவின் மற்றும் கோல்டன், வண. டேவிற்அழகராஜா, ஜெசிந்தா, புஸ்பராணி, மாலதி, வசந்தமலர் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.


அன்னாரின் பூதவுடல் 08-02-98 இல் மட்டக்குளி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. ஆனந்தநாயகம்
(சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி
யாழ்ப்பாணம்)

37, செம்மணி வீதி,
நல்லூர்.

(53333)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 04 — 1910

மறைவு: 13 — 01 — 1998

### அமரர் சின்னர் பாலு
[தாவளை, இயற்றாலை, கொடிகாமம்]

கொடிகாமம் தாவளை, இயற்றாலையைச் சேர்ந்த சின்னர் பாலு 13-01-1998 அரியாலையில் காலமானார். இவரின் ஆத்மசாந்திக் கிரியையும், மதிய போசனமும் இன்று (12-02-1998) வியாழக்கிழமை இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

35, மலர்மகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(இ/2867)

# சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, பெப். 12

கோண்டாவில் — தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை மாசிமாதப் பிறப்பு நன்னாளில் காலை 6.30 மணிக்கு சங்கிராந்தி உற்சவம், பூசை வழிபாடுகளுடன் நடைபெற்று அம்பாள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாநகரசபை மின்சாரப்பகுதியைச் சேர்ந்த சி. தில்லைமணியின் "பண்ணிசை" நிகழ்வு பக்கவாத்திய சகிதம் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கான அறிமுகவுரையை இசைமணி சி. துரைராஜா நிகழ்த்துவார். (ஐ-30)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு பாடசாலை வீதியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அஷ்டோத்தர 108 கலச சங்காபிஷேகம் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ச. ஸ்ரீ சந்தனக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாசி மாதப் பிறப்பை முன்னிட்டு காலை 8.30 மணி முதல் விசேட அபிஷேகம், பூசை நடைபெறும். இதனைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)


நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்

12-02 98 முதல் 13-02-98 வரை
ரஜனி - நக்மா, ரகுவரன்
நடித்த
பாட்ஷா

14-02-98 முதல் 15-02-98 வரை
விஜய் - சங்கீதா
நடித்த
பூவே உனக்காக

காட்சிகள்:- 10-30, 2-30
(ப.நே.) (இ/2765)



லிபேட்டி சினிமா
அச்சுவேலி
30 அடி அகலத் திரையில்

இன்று மட்டும்
ரஜனி, சத்தியராஜ்
நடித்த
தம்பிக்கு எந்த ஊரு
(புதிய வெளியீடு)
குடும்பச் சித்திரம்

நாளை முதல்
பிரபுவின்
பொன் மனம்

10-30, 2-30
(53069)


## சாயி சிந்தனை

மனித வாழ்க்கையைச் சீரமைக்கவும், திருத்தி நடத்தவும் பல மதங்கள் உருவாயின.

வைஷ்ணவர்கள் விஷ்ணுவே மிகப் பெரியவர் எனவும், சைவர்கள் சிவபெருமானே உயர்ந்தவர் எனவும் உயர்த்திப் பேசுகின்றனர். காணாபத்தியம் என்கிற வழி நடப்பவர் அனைவரும் கணபதியே முழு முதற் கடவுள் எனப் போற்றுகின்றனர். இஸ்லாமியர்கள் அல்லாவே அனைவரிலும் பெரியவர் என உயர்த்திக் கூற, கிறிஸ்தவர்கள் யேசு கிறிஸ்து மட்டுமே ஒரே கடவுள் எனக் கொண்டாடுகின்றனர். புத்தரே சிறந்தவர் என பௌத்தர்களும் மகா வீரரே உயர்ந்தவர் என ஜைனர்களும் வழிபடுகின்றனர்.

ஆனால் அனைவரும் சமமே! ஒருவரே! எல்லா மதங்களுக்கும் பொதுவானவர் கடவுள். அவரே சாந்தி மிகுந்தவர்!

ஆதாரம்: சனாதன சாரதி.

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். இலக்கிய வட்டம் நடத்தும் அமரர் க. தி. சம்பந்தன் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கிறது.

இலக்கிய வட்டத் தலைவர் கல்வயல் வே. குமாரசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சு. வேலுப்பிள்ளை வெளியீட்டுரையும், செல்வி மாதவி சுந்தரம் பிள்ளை (முதுதத்துவமாணி), கலாநிதி நா. சுப்பிரமணியம் ஆகியோரின் ஆய்வுரைகளும் இடம்பெறும். (இ-3)

## 170 பொதிகளில் கடிதங்கள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 170 தபாற் பொதிகள் நேற்று செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன. கடிதங்களைத் தரம் பிரித்து விநியோகிக்கும் பணிகள் நேற்றே ஆரம்பமாகின.

இதேவேளை இங்கிருந்து 70 தபாற் பொதிகள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. [ஐ-7]

## பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து காயம்

யாழ்ப்பாணம், பெப். 12

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் இருந்து தவறி விழுந்து ஒருவர் காயமடைந்தார்.

கண்டி வீதியில் நாவற்குழிக்கும், அரியாலைக்குமிடையில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்த எஸ்.சுஜீபன் (வயது 16) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 12

ஏழாலை மேற்குச் சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் செ. சிவநடராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக ஆ. திருநாவுக்கரசு கலந்து கொள்வார். (இ-7)


## அறிவித்தல்

உடுப்பிட்டி இமையாணன் பெரிய தம்பிரான் ஆலயத்தைச் சாட்டி சிலர் கோயிலுக்குப் பணம் சேர்க்கின்றார்கள். இது விடயமாகப் பக்தர்களை விழிப்பாக இருக்கும்படி கோயில் ஆதீனகர்த்தா கேட்டுக்கொள்கிறார்.

செ. சிவக்கொழுந்து
ஆதீனகர்த்தா

(53330)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 25 — 10 — 1942

உதிர்வு: 24 — 01 — 1997

### K.C. விநாயகேந்திரன்

திதி: 12 — 02 — 1998

இரட்டையர் இசைக்குழுவை இயக்கி
இப்புவிதனில் புகழீட்டி நின்றீர்!
சாயிபாபா பக்தனாய் சுவிஸ்நாட்டிலும்
சிறப்புற செம்மையாய் வாழ்ந்தீர்!
சுகயீனம் என்று சரீரம் வருந்தாது, வாடாது
சடுதியாய் சாயி சேவடி ஏகிவிட்டீர்!

நின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
சகோதரர்கள்:

நாகமித்திரன் (உரும்பிராய்),
ஞானமித்திரன் (இந்தியா),
யோகேந்திரன் (பபி - மானிப்பாய்)
குடும்பத்தினர்:

(53332)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா பிரதமராவதைத் தடுக்க
# அரசமைப்பில் திருத்தம் செய்க

## சிவசேனைத் தலைவர் தாக்கரே வலியுறுத்து

புதுடில்லி, பெப். 12

சோனியா காந்தி பிரதமர் பதவியில் அமர்வதைத் தடுக்க, அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று சிவசேனைக் கட்சியின் தலைவர் பால் தாக்கரே தெரிவித்துள்ளார்.


பாரதிய ஜனதா தலைமையிலான கட்டணி அரசு ஆட்சிக்கு வந்தால் இந்தச் சட்டம் திருத்தம் குறித்து வலியுறுத்துவேன்.

பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வைத்துள்ள சமதா கட்சி ஏற்கெனவே இது போன்றதொரு சட்ட திருத்தத்துக்கு கோரிக்கை விடுத்திருக்கிறது.

சோனியா காந்திக்கு கூட்டம் அதிகம் வருவதைக் குறிப்பிட்டு, கூட்டம் அவரைப் பார்க்கத்தான் வருகிறதே தவிர அவருக்கு ஆதரவு தெரிவிக்க அல்ல.

சோனியாவின் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்றும் இது காங்கிரசுக்கு பலனை அளிக்கும் என்றும் ஆங்கில வாராந்திர பத்திரிகை கூறியுள்ளது. இதனால்தான் தேர்தல் கருத்துக் கணிப்புகளுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று கோருகிறேன்— என்று அவர் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால் அதைத் தொலைவிலிருந்து கொண்டே இயக்குவேன் என்று [illegible] என்ற இடத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் கூறியதாக சொல்லப்படுவதை அவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது. மகாராஷ்டிரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் என் கருத்தையும் கேட்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். அவ்வளவுதான். நான் யாரையும் ஆட்டிப் படைக்க விரும்பவில்லை என்று தாக்கரே கூறினார். (ஐ-10)




முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக சென்னை பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ள கேலிச் சித்திரம் இது.

## ஜெயலலிதாவை வரவேற்க

# அரைக் கிலோ மீற்றருக்கு மலர்களால் வீதி அமைப்பு!

சென்னை, பெப். 12

அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தேர்தல் பிரசாரம் செய்ய பூந்தமல்லி வந்தபோது அவருக்கு மலர்ப் பாதை அமைத்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை மாலை தமது முதற் கட்டத்தேர்தல் பிரசாரத்தை ஜெயலலிதா தொடக்கினார். கரையான்சாவடியிலிருந்து பூந்தமல்லி பஸ் நிலையம் வரை அரை கிலோ மீற்றர் தூரத்துக்கு வீதியின் நடுவில் பூக்களைக் கொட்டிமலர்ப்பாதை அமைத்து அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பூந்தமல்லியில் வானில் இருந்தபடியே தொண்டர்களின் மத்தியில் அவர் தேர்தல் பிரசாரம் செய்தார். 15 நிமிடங்கள் பேசினார்.

அவரது பிரசார வான் உள்ளிட்ட வாகனங்கள் அனைத்தும் அந்தமலர்ப்பாதையில் சென்றன.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது இத்தகைய வரவேற்பும் மலர்ப்பாதையும் சகஜம். தற்போது முதன் முறையாக அத்தகைய வரவேற்பு காணப்பட்டது.

ஜெயலலிதாவை வரவேற்கும் போது மாலைகளும் சால்வைகளும் வழங்குவதைத் தவிர்த்து தேர்தல் பிரசாரப் பணிக்கு ஒத்துழைக்குமாறு அ தி மு.க.தலைமைக்கழகம் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை —

ஆங்காங்கு ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகள் எதுவும் ஆடம்பர விழாக்களாக அமைந்துவிடாமல் எளிமையுடன் அதே சமயம் எழுச்சியுடன் நிகழ்ந்திடல் வேண்டும் என்று தமது கட்சியினரை தி. மு. க. தலைவரும் முதல்வருமான கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# இந்திய இராணுவத்தில் 50,000 பேர் குறைப்பு!

புதுடில்லி, பெப். 12

அடுத்த இரு வருடங்களுக்குள் இந்திய இராணுவத்தின் எண்ணிக்கை 50 ஆயிரத்தால் குறைக்கப்படவுள்ளதாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வேல்பிரகாஷ் காஷ் மாலிக் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இந்திய இராணுவத்தின் எண்ணிக்கை 9லட்சத்து 80ஆயிரம் ஆகும்.

அடுத்து வரும் இரு ஆண்டுகளில் 50 படையினர் குறைக்கப்படுவர். இதன் மூலம் கிடைக்கும் சேமிப்பு ஏனைய துறைகளுக்கு செலவிடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்திய இராணுவத்தில் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இன்னும் 12 ஆயிரம் அதிகாரிகள் தேவைப்படுகின்றனர். (ஐ)

## இந்தியச் செய்திகள்

### பாக். - வங்காளம் இந்தியாவுடன் இணையவேண்டுமாம்

புதுடில்லி, பெப். 12

பாகிஸ்தானும், பங்களாதேஷும் மீண்டும் இந்தியாவுடன் இணைந்து கொள்ள வேண்டும் எனத் தாம் விரும்புவதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் லால் கிருஷ்ணா அத்வானி தெரிவித்துள்ளார். அவை அவ்வாறு இணைந்துகொண்டால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## மரணதண்டனை விதிக்கப்பட்ட

# 26 தமிழர்களையும் காக்க உயிர்காப்பு குழு அமைப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்காக '26 தமிழர்கள் உயிர்காப்பு நிதிக்குழு' என்ற பெயரில் அமைப்பு ஒன்று சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் தலைமையில் சென்னையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

புரவலர்ஜோர்ஜ்பெர்னாண்டஸ், ப. நெடுமாறன் ஆகியோர் உட்படப்பலர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (ஐ-10)

# பிள்ளைகள் அதிகம் பெற்றோர் தேர்தலில் போட்டியிட முடியாது?

## பி. ஜே. பி ஆட்சி வந்தால் சட்டம்வரும்

புதுடில்லி, பெப்12

இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சி பதவிக்கு வருமாயின் இரண்டு பிள்ளைகளுக்கு அதிகமாகக் கொண்டுள்ள எவரையும் மாநில மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் தேர்தல்களில் போட்டியிட அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்யக் கூடும்.

கட்சியின் தலைவர் லால் கிருஷ்ணன் அத்வானி முன்கண்டவாறு கூறியுள்ளதாக பீ ரி. ஐ. செய்தி நிறுவனம் அறிவித்தது.

சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெற்றுள்ளவர்களைத் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு தடுப்பதற்கு சட்டம் கொண்டு வருவது பற்றி பாரதிய ஜனதாக் கட்சி பரிசீலனை செய்யும்.

ஒரு பிள்ளையை அல்லது இரண்டு பிள்ளையை மட்டுமே கொண்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்குவது பற்றியும் ஆராயப்படும் என அவர் கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் என இரு பிள்ளைகளே உள்ளனர்.

பிரதமர் பதவிக்கு குறிவைத்துப் போட்டியிடும் வேட்பாளர் அடல்பிகாரி வாஜ்பாய் ஒரு பிரமச்சாரி ஆவார். முன்னாள் காங்கிரஸ் பிரதமரான நரசிம்மாராவுக்கு ஒன்பது பிள்ளைகள். (ஐ-9)

# ராமர் பிறந்தது அயோத்தி அல்ல; கோசலை என்கிறார் கருணாநிதி!

திருச்சி, பெப். 12

ராமர் பிறந்த இடம் அயோத்தி அல்ல; கோசலையில்தான் அவர் பிறந்திருக்க வேண்டும் — என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசும்போது அவர் இதனைத்தெரிவித்தார்.

அயோத்தியின் மன்னன் ஜனகனின் மனைவியோ கௌசல்யாய அவள் தலைப்பிரசவத்துக்கு தனது தாய் வீட்டுக்குத் தானே சென்றிருப்பாள்? அப்படியானால் ராமர் பிறந்த இடம் கோசலையில் தான் இருக்க வேண்டும். கணவன் வீட்டில் அதாவது அயோத்தியில் எப்படி ராமர் பிறந்திருக்க முடியும்?

அத்வானி, வாஜ்பாய் போன்றவர்களே தயவு செய்து தவறான மரபை உருவாக்க முயலாதீர்கள்.

—இவ்வாறு கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

ராமர் பிறந்த இடம் அயோத்தி என்று பாரதீய ஜனதாக் கட்சி கூறிவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது

## முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கூறுகிறார்

சண்டிகர் பெப். 12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சி அமைக்கும் அளவுக்கு எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடைக்காத நிலை ஏற்படும் என்று முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கருத்து தெரிவித்தார்.

சண்டிகரில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதுகுறித்துக் கூறியதாவது:-

நாடாளுமன்ற ஜனநாயக முறைதான் நமது நாட்டுக்கு மிகவும் உகந்தது. எனவே ஜனநாயக முறை நமது நாட்டில் தோல்வி அடைந்துவிடவில்லை. இதைச் சரிவர செயற்படுத்த வேண்டிய பொறுப்பு மக்கள் கையில் தான் உள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயக முறை மூலம் [illegible] தும் மக்களுக்கு தினமும் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளன. ஆனால் அதிபர் ஆட்சிமுறையில் அவர் தவறாக நடக்க முயன்றால் தீர்வுகாண்பது கடினம்.



மக்களின் பிரச்சினைகளைப் பற்றியோ அல்லது அவற்றுக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் குறித்தோ காங்கிரஸ் கட்சியும் பா. ஜ. வும் கவலைப்படவில்லை. அற்ப விஷயங்களில் மட்டுமே அவை கவனம் செலுத்தி வருகின்றன.

பெரும்பான்மைப் பலம் இருந்தால்தான் நிலையான ஆட்சியை அமைக்க முடியும் என்பது கட்டாயமல்ல. ஆனால் நிலையான ஆட்சி தொடர பொதுமக்களின் ஆதரவு மிக அவசியம்.

நாடாளுமன்றத்தில் எத்தனை இடங்களைத் தங்களது கட்சி தக்கவைத்துள்ளது என்பதைவிட நாட்டின் பிரச்சினையை முக்கியமாக அரசியல் வாதிகள் மனதில் கொள்ள வேண்டும். ஆனால் நடைமுறையில் அரசியல் வாதிகளும் தகவல் தொடர்பு சாதனங்களும் வெளியிடும் தவறான தகவல்களால் பொதுமக்கள் மனதில் முழுக்குழப்பம்தான் ஏற்படுகிறது என்றார் அவர். (ஐ-10)

## ஆஸ்திரேலியாவில் இருந்து திரும்பியதும்

# தி.மு.க கூட்டணியை ஆதரித்து ரீ.வியில் ரஜனி பிரசாரம்

பொதுத்தேர்தலுக்காக தமிழ் நாட்டில் தி.மு.க—த.மா.கா கூட்டணியை ஆதரித்து பிரபல நடிகர் ரஜனிகாந்த் தொலைக்காட்சியில் பிரசாரம் செய்யவுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியா சென்றுள்ள ரஜனிகாந்த் இரண்டொரு தினங்களில் நாடு திரும்பியதும் அவரது தொலைக்காட்சிப் பிரசாரத்தை ஆரம்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை உட்பட ஒருசில நகரங்களில் தி. மு. க கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் ரஜனிகாந்த் உரையாற்றுவதற்கு [illegible] சிக்கப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொலையாளிகளும், குண்டுகளும் மட்டக்களப்பில் இருந்தே வருகை

## அங்குள்ள பொலிஸாருக்கு விசேட பணிப்புரை

கொழும்பு, பெப்.12

மட்டக்களப்பிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் அனைத்து வாகனங்களையும் தீவிரசோதனைகளுக்கு உள்ளாக்கும்படி தேசிய இரகசிய தகவல் பணிமனை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாதுகாப்புப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளது. 'திவயின' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு மற்றும் நாட்டின் தென்பகுதியில் தாக்குதல்களை மேற் கொள்ளும் தற்கொலைப்படை போராளிகளும் அவர்கள் பயன்படுத்தும் வெடிப்பொருள்களில் பெரும்பகுதியும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தே அனுப்பப்படுகின்றன எனத் தகவல்கள்கிடைத்துள்ளதை அடுத்தே மேற்கண்ட பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் கொம்பனி வீதியில் இடம் பெற்றகுண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட தற்கொலைப் படைப் போராளியும் அவரது குழுவினரும்மட்டக்களப்பு வாகரையில் இருந்து வந்துள்ளதும் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதற்கு ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்தப் பணிப்புரையை அடுத்து மட்டக்களப்பில் வாழும் மக்கள் மற்றும்அவர்களது உடைமைகள் பற்றிய தகவல்களை பொலீசார் சேகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# பருத்தித்துறை நீதிமன்றம் வதிரியில் இயங்கும்

வடமராட்சி, பெப். 12

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றமும், நீதிவான் நீதிமன்றமும் எதிர்வரும் மார்ச் மாதம் முதல்வாரம் தொடக்கம் இயங்கவுள்ளது.

இந்நீதிமன்றத்துக்கான தளபாடங்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் விரைவில் வந்து சேரவுள்ளன.

தளபாடங்கள் வந்து சேர்ந்ததும் வதிரியில் இந்நீதிமன்றம் இயங்கும். நீதிமன்றத்தை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. விக்னராஜா வடமராட்சிப் பகுதியிலுள்ள சட்டத்தரணிகளுடன் கடந்த திங்கட்கிழமை நெல்லியடியில் வைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

(ஐ-173)

# ஜனாதிபதியின் செயலராக எம். டி. டி. பீரிஸ்?

கொழும்பு, பெப். 12

மூத்த சிவில் சேவை அதிகாரியான எம். டி. டி. பீரிஸ் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றி இவர் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

தற்போது ஜனாதிபதியின் செயலாளராகப் பணியாற்றும் கே. பாலபட்டபெண்டி சேவையிலிருந்து விலக விரும்பியுள்ளார் எனத் தெரியவருகிறது அவ்வாறு விலகும் பட்சத்தில் வெளிநாடு ஒன்றில் சிறிலங்காவின் தூதுவராக அவர் நியமிக்கப்படலாம் என்றும் நம்பப்படுகிறது.

மிகவிரைவில் தனியார் மயமாக்கப்படவுள்ள முக்கியமான ஒரு துறைக்கு பாலபட்ட பெண்டி தலைவராக நியமிக்கப்படக் கூடும் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது. (ஐ-10)

### தலதா மாளிகைச் சம்பவம்

# முன் கூட்டியே தகவல் கொடுத்தும் பலன் இல்லை

## பொலிஸ் அதிகாரி கவலை

கொழும்பு, பெப். 12

விடுதலைப்புலிகள் தலதா மாளிகை மீது தாக்குதலை மேற் கொள்ளவுள்ளனர் எனவும் விமானப் படைத் தலைமையகத்திற்கு அண்டிய பகுதியில் குண்டுகளை வெடிக்கவைக்கவுள்ளனர் எனவும் நேரகாலத்துடனேயே தான் பொறுப்பானவர்களுக்குத் தகவல் வழங்கியதாகவும் இருப்பினும் அந்த இரு சம்பவங்கள் இடம் பெறாமல் தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தோன்றுவதாகவும் பயங்கரவாதக் குற்றச் செயல்கள் குறித்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வாகி குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி மீது தாக்குதலை மேற்கொள்ள குண்டுகள் நிரப்பிய லொறி ஒன்றுடன் புலிகள் கொழும்பு வந்துள்ளனர் என 24 - 01 - 96 அன்று தான் தகவல் கொடுத்தார் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காததால் 30-01-1996 அன்று மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார் — என ''திவயின'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-10)

# தென்னிந்திய திருச்சபையின் 'சினட்' மகா சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 12

தென்னிந்திய திருச்சபையின் 26 ஆவது சினட் மகாசபைக் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ராயல் சீமா நகரில் நடைபெற்றது.

தென்னிந்தியத் திருச்சபையின் இருபத்தொரு மறை மாவட்டப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அதி. வந்தனைக்குரிய பேராயர் எஸ். ஜெபநேசன், வண. அ. ஜெயக்குமாரன், செல்வி கறோல் அருளானந்தம் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் அடுத்து இரு வருடங்களுக்குரிய நிர்வாக உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் பேராயர் அதி வந்தனைக்குரிய வில்லியம் மோசஸ் சினட் மகாசபையின் தலைமைப் பேராயராகத் தெரிவு செய்யப்பட்ட வேளை யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ-7)

# 55 பேருக்கு மூக்குக் கண்ணாடி

தென்மராட்சி, பெப். 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 55 பேருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கழக அலுவலகத்தில் கழகத் தலைவர் லயன். பா. விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் லயன். டாக்டர் க. தா. சிவபாதம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (ஐ-117)

# சிறுவர் விழிப்புணர்வு கருத்தரங்கு

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினர் ஒழுங்கு செய்துள்ள சிறுவர் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று கண்டிவீதி, சுண்டுக்குளியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நிலையத் தலைவர் க. சிவஞானம் தலைமையில் நடைபெற உள்ளது. இக் கருத்தரங்கில் வரவேற்புரையை செயலாளர் த. பாலதயானந்தன் நிகழ்த்துவார்.

'இன்றைய யாழ். மாவட்ட சிறார்களின் நிலை' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராஜா உரையாற்றுவர். எம். கே. ஜீவகதாஸ் நன்றியுரை வழங்குவார்.

பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-9)

# விவசாய உபகரணம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெறும் பயிற்சி நெறிகளை ஊக்குவிக்கும் வகையில் உலக உணவு விவசாய நிறுவனம் விவசாய உபகரணங்கள் பலவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு சிறு உழவு இயந்திரங்கள் மற்றும் கத்திகள், அலவாங்குகள் மண்வெட்டிகள் பிக்கான்கள் வாளிகள், ... ... வழங்கப்பட்டவை ஆகும். (இ-7)

# குடி தண்ணீருக்கு மட்டும் ரூ. 12 லட்சம் செலவு!

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட ஊழியர்களுக்கான குடி தண்ணீருக்காக மட்டும் சுமார் 12 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாக அறியப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பிலிருந்து விமானம் மூலமே போத்தல்களில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர் இங்கு கொண்டு வரப்பட்டது என்று கூறப்படுகிறது. (இ-7)

### புதிய கல்வியாண்டுக்கான

# யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள் அடுத்த மாதம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 1996 - 97 கல்வியாண்டு விஞ்ஞான பீட மாணவர்களுக்காக விரிவுரைகள் மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகளை மார்ச் மாதம் 25 ஆந்திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன

மருத்துவபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

விஞ்ஞான கலைப்பீட மாணவர்களுக்கான ஆங்கிலம் கற்கை நெறிகளும், அடிப்படைக் கணனிக் கற்கை நெறிகளும் அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி வரை நடைபெறும்.

இக் கற்கைநெறிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகள் மார்ச் மாதம் 27ஆம் திகதி நடைபெறும். (ஐ 9)

# யாழ். பிரதேச செயலர் பிரிவில் புதிய குடும்ப அட்டைகள்

யாழ். பிரதேசச் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவை அலுவலர்கள் மூலம் தற்போது நிவாரண உதவிப் பதிவு அட்டை என்ற பெயரில் புதிய குடும்ப அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதான குடியிருப்பாளர்கள் தத்தமது கிராம சேவை அலுவலர்களை நேரில் அலுவலகத்தில் சந்தித்து இதற்குரிய படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

படிவத்தை விரைவில் பூரணப்படுத்தித் தத்தமது பகுதிக் கிராம சேவை அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது [ஐ-30]


# வாழ்த்துகின்றோம்

கொழும்புத்துறை பிரபல சமய சமூகத் தொண்டரும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் உதவிச் செயலாளருமான

'சமூகஜோதி'

உயர்திரு. கா. கணேசதாசன் J. P.

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையை வாழ்த்துகின்றோம்.

சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்.

கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2866)



யாழ். நகர் கோலாகலம் காணவிருக்கும்
மணிக்குரல் விளம்பர சேவையின்
25 ஆவது ஆண்டு நிறைவு விழாவில்
திருமணப் பட்டுப் புடைவைகள்
விற்பனையில் கைராசியான
நிறுவனமாய்த் திகழும்

லலிதா ரெக்ஸ்ரைல்ஸ்
வழங்கும்
"பாட்டுக்குப் பாட்டு"

பாட்டுக்குப் பாட்டு, தேன் இசை மழை ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் நேயர்கள் ஆண், பெண் இருபாலாரும் உங்கள் பெயர், முகவரி, பங்குபற்றும் நிகழ்ச்சி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி எதிர்வரும் 5-03-98-க்கு முன்பதாக அனுப்பி வையுங்கள். கடித மூலமோ அன்றி நேரிலோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்!

V. S. சற்குணன்
மணிவீடியோ
இல. 46, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

லலிதா ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 5, 6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(53325)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடல் மீது யுத்தம் செய்வதன் மூலமே இனிப் புலிகளை ஒடுக்க வேண்டும்

## விமானப்படைத் தளபதி இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, பெப். 12

விடுதலைப் புலிகளுடனான போரை எதிர்காலத்தில் கடல் மீதே நடத்த வேண்டும்.

விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க மேற்கண்டவாறு ஆலோசனை கூறியுள்ளார்.

இலங்கையைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதியில் பெரும்பாலான பகுதிகளில் கடுங்காவல் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாம் இப்போது போரின் இறுதிக் கட்டத்துக்கு வந்து விட்டோம். வெளியில் இருந்து வரும் உதவிகள் அனைத்தையும் துண்டித்து விட்டால் பயங்கரவாதத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து விடலாம். இன்று எம்மிடம் உள்ள கடற் கலங்கள் போதுமானவையாக இல்லை.

வேறு நாடுகளின் மீன்பிடிக் கலங்கள் இலங்கைக் கடல்நீர் எல்லைக்குள் வருவது தடுக்கப்பட வேண்டும். கடல் மூலம் விடுதலைப்புலிகள் பெறும் உதவிகளைத் தடுப்பதற்கு கடலில் அவர்களின் பலத்தை ஒடுக்க வேண்டும்.

கடலுக்குப் போகும் இலங்கை மீனவர்களை அடையாளம் காண இலங்கைக் கடற்படையினருக்கு சிரமம் எதுவும் கிடையாது. உத்தேசித்திருக்கும் கடற் போரிலே இலங்கையின் அண்டை நாடுகளின் உதவியை இலங்கை நாட வேண்டும். பயங்கரவாதிகளால் அந் நாடுகளுக்கும் ஆபத்து இருப்பதால் அவர்களது உதவியைப் பெறுவது இலகுவாக இருக்கும் என்றும் விமானப் படைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-9-21)

# ரவைகள் பாவனையில் ஊழல் நடந்திருக்கலாம்

## இராணுவ விமர்சகர் கருத்து

யாழ்ப்பாணம், பெப். 11

தம்பலகம் பாரதிபுரத்தில் எட்டுத் தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் படுகொலை செய்யப்பட்ட சம்பவ காலத்தில் 36 ஆயிரம் ரவைகள் படையினரால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அதில் ஊழல் ஏதும் இடம் பெற்றிருக்கும் எனக் கருதுகிறேன்.

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

36 ஆயிரம் ரவைகள் என்பது பெரிய இராணுவ நடவடிக்கைகளிலீடுபடும் பரந்த எண்ணிக்கையிலான துருப்புகளுக்குச் சுமார் இரண்டு நாள்களுக்குப் போதுமானது. சிறிய எண்ணிக்கைப் பொலிஸார் ஒரு நாளில் அதனைப் பயன்படுத்தியிருக்க முடியாது.

ஒன்றில் இந்தப் பெயரில் ரவைகள் மோசடி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ரவைகளைக் கணக்கெடுத்ததில் தவறு ஏதும் ஏற்பட்டிருக்கலாம் — என்றார் அத்தாஸ்.

(உ-10)

# கொழும்பு நகரில்

# ஒரு நாளில் 7 ஆயிரம் வாகனங்கள் சோதனை

கொழும்பு, பெப். 12

கொழும்பு நகரில் ஒரு நாளில் அதிகளவு வாகனங்கள் சுதந்திர தினத்தன்று சோதனையிடப்பட்டன என பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்று கொழும்பு நகரில் பாதுகாப்புத் துறையினரால் 7 ஆயிரம் வாகனங்கள் சோதனையிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் 2 ஆயிரத்து 500 மோட்டார் சைக்கிள்களும் அடங்குகின்றன.

வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்பு நகருக்குள் நுழைந்த வாகனங்களே பெரும்பாலும் சோதனைகளுக்கு உட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர தினத்தன்று கொழும் நகரில் விடுதலைப் புலிகள் ஏதாவது வன்செயல்களில் ஈடுபடக்கூடும் என எதிர்பார்த்தே அதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த வாகனப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

குண்டுகள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து பாதுகாப்புத் துறையினர் விழிப்பாகவிருந்ததாகவும் எனவேதான் கொழும்பு நகருக்குள் இருந்து வெளியேறவும் கொழும்பு நகருக்குள் வரவும் முயன்ற அனைத்து மோட்டார் சைக்கிள்களும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

# தாய் - சேய் நிலையங்களுக்கு தளபாடங்கள் கிடைக்கும்

திருநெல்வேலி, பெப். 12

நல்லூர்ப் பிரதேச சபை பகுதியிலுள்ள நான்கு தாய்-சேய் சிகிச்சை நிலையங்களுக்கு அலுமாரி, கட்டில், வாங்கு, மேசை, கதிரை ஆகிய அத்தியாவசிய தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன. கடந்த வருட பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா நிதியிலிருந்து இத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருநெல்வேலி, அரியாலை, கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களிலுள்ள தாய்-சேய் சிகிச்சை நிலையங்களுக்கே இத்தளபாடங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

[ஐ-135]

# சாரதியின் 'பிரேக்'கினால் காயமுற்ற பயணிகள்!

தென்மராட்சி, பெப். 12

பஸ்ஸின் மிதிபலகையில் நின்ற பயணிகளை பஸ்ஸினுள் ஏறுமாறு சொல்வதற்குப் பதிலாக சாரதி இரு இடங்களில் திடீரென 'பிரேக்' போட்டதால் பயணிகள் பஸ்ஸினுள் வீழ்ந்ததுடன் ஒரு குழந்தை உட்பட மூவர் உதடுகள், மூக்கு உடைந்து காயமடைந்தனர்.

சம்பவம் சென்ற திங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து பளைக்குச் சென்ற இ. போ. சபை பஸ்ஸில் இடம் பெற்றது.

மிருசுவில், எழுதுமட்டுவாள் ஆகிய சோதனைச் சாவடிகளில் சோதனையை முடித்துக் கொண்டு பயணிகள் பஸ்ஸில் ஏறியதும் புறப்பட்ட பஸ் திடீரென 'பிரேக்' போட்டதால் பயணிகள் அடிபட்டு வீழ்ந்தனர். இருக்கையில் இருந்தவர்கள் முன் இருக்கைகளின் கம்பிகளுடன் மோதியதில் காயமேற்பட்டது.

இச்சம்பவங்களினால் ஆத்திரமடைந்த பயணிகள் சாரதியுடன் வாக்குவாதப்பட்டனர்.

(உ-117)

# உதவிப்பணம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப். 12

நெடுந்தீவுப்பகுதியில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான தைமாதக் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை முதல் வழங்கப்பட இருப்பதாக நெடுந்தீவுத் தபால் அதிபர் அறிவித்துள்ளார்.

உதவிப்பணம் பெறுவோர் நெடுந்தீவுப்பிரதம தபாலகத்திலும் ஏனைய இரு உப தபாலகங்களிலும் தமக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(உ-7)

# குறுகிய கால விவசாய பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், பெப். 12

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் வாரந்தோறும் புதன்கிழமைகளில் குறுகிய கால விவசாயப் பயிற்சிநெறி ஒன்று இடம் பெற்று வருகின்றது.

சுமார் 40 இளைஞர், யுவதிகள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

(இ-7)

# அராலி - மாதகல் வீதியில் போக்குவரத்து மிகச்சிரமம்

## பஸ்கள் அடிக்கடி பழுது!

யாழ்ப்பாணம், பெப். 12

அராலி — மாதகல் வீதி படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பாதை மிக நீண்டகாலமாகவே திருத்தியமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காட்சி தருகின்றது.

இப்பாதை வழியாகப் போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டி மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. தனியார் மினிபஸ் சேவை வழங்கப்படாத நிலையில் அதிகளவு பயணிகள் இப்பாதையில் பயணிப்பதைக் கருத்திற் கொண்டு இச்சேவை போக்குவரத்துச் சபையால் வழங்கப் படுகின்றது.

இவ் வழியாகப் பயணம் செய்யும் பஸ்வண்டிகள் அடிக்கடி நடுவீதியிலே காற்றுப் போய் நின்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பாதையால் பஸ் சேவைக்கு ஒதுக்கப்பட்ட நேரம் ஒருமணித்தியாலம் 15 நிமிடங்கள் ஆகும். ஆனால் சாரதிகள் மிகச் சிரமத்தின் மத்தியில் ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்களிலேயே பயணத்தை முடிக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் சாரதிகள் அப்பகுதியில் சேவையாற்ற முன்வருவதில்லை எனவும் போக்குவரத்துச்சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பாதை வழியாகத் தொடர்ந்து பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமானால் பஸ்கள் சேதமடைவதையும் தவிர்க்க முடியாது போய் விடும் என அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

(ஐ-9)

# தொழில் நுட்பமாணவருக்கும் மகாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப் 12

உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலும் 28 மாணவர்களுக்கு மகாபொல கொடுப்பனவு கிடைத்துள்ளது.

உயர்தொழில் நுட்ப நிறுவனம் தனித்துச் செயற்பட ஆரம்பித்ததன் பின்னர் இம்முறையே முதன் முதலாக மகாபொலக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அனைத்துக் கற்கை நெறிகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 28 மாணவர்களுக்கே இக்கொடுப்பனவு யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து வழங்கப்படுகின்றது.

முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 18 பேருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஏனைய 10 மாணவர்களுக்கும் இக்கொடுப்பனவு விரைவில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

[ஐ-9]

# புலிகளிடமிருந்து எனக்கு மரண அழைப்பாணை!

## விமானப்படைத் தளபதி சொல்கிறார்

கொழும்பு, பெப். 12

வடபகுதியில் விமானப்படை விடுதலைப்புலிகளின் பல முகாம்களைத் தாக்கி அழித்துள்ள காரணத்தினால் விடுதலைப்புலிகள் தனக்கு மரண அழைப்பாணை விடுத்துள்ளனர் என விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை விமானப்படைத் தலைமையகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் குண்டு வெடிப்பில் பலியான தற்கொலைப்படை பெண் போராளி தன்னைக் கொல்லும் நோக்கத்துடனேயே அவ்வாறு வந்தார் எனத் தான் திடமாக நம்புவதாகத் தெரிவித்துள்ள விமானப்படைத் தளபதி, அந்தச் சம்பவம் இடம் பெறுவதற்கு 2 நிமிடங்களுக்கு முன்னரே தாம் அந்த வழியால் சென்று ஒரு கலந்துரையாடலில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்கொலைப் படைப் பெண்போராளி நடந்தே வந்தார் என்பதை தான் பூரணமாக நம்புவதாகவும், தனது உடலில் குண்டுகளைக் கட்டிக் கொண்டு அவ்வளவு தூரம் வந்த போதிலும் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினரும் விமானப்படையினரும் அந்தப் பெண்ணின் அடையாள அட்டையைப் பரிசீலித்தனர் எனவும் ஆனால் அதில் திருப்தியடையாததால் அந்தப் பெண்ணை சோதனையிட முற்பட்டபோதே இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது எனவும் விமானப்படைத் தளபதி தெரிவித்தார்.

(ஐ-10)

# சகல வளங்களையும் ஒன்றுதிரட்டி கல்வி வளத்தை ஊக்குவிப்போம்

## பரிசளிப்பு விழாவில் உரை

எமது கல்விப் பாரம்பரியம் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு தற்போதுள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம்'' ஆகிய பிரிவினர் ஒத்துழைத்து எமது கல்விப் பாரம்பரியத்தை நிலை நாட்டுவதற்கு முன்வர வேண்டியது அவசியமாகும்.

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மெ. இருதயநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி - தென் மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கலையரங்கில் வித்தியாலய அதிபர் அ. நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்ற இவ்விழாவில் திருமதி இருதயநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்தி வருவதை இப்பாடசாலையில் அவதானிக்க முடிகின்றது. கடந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இப்பாடசாலையிலிருந்து ஆறு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள். ஒரு மாணவர் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றவராக விளங்குகின்றார். இதற்கு காரணமான ஆசிரியர்களையும், அதிபரையும், பெற்றோர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டு அவர்களைஎமது சமூகத்தின் நற்பிரஜைகளாக உருவாக்கும் பெரும் பொறுப்பும் பெற்றோர்களையும், ஆசிரியர்களையுமே சார்ந்தது. எமது எதிர்கால சந்ததி சிறப்படைவதற்கு பாடசாலைக் கல்விதான் அடித்தளமாக விளங்குகின்றது — என்றார்.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்வி இணைப்பாளர் சி. செல்லையா உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஐ. ஞானேந்திரா நன்றியுரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆங்கில (எடுத்துச் செல்ல கூடியது) Olivetti வகை தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. 186/22, குருநாதர் வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [53303]

பிறிமா புரோயிலர் குஞ்சுகள், பிறிமா பிறவுன் வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகாபதி'' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [53323]

வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட பொமனேரியன் கறுப்பு ஆண், பெண் நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தைமுன் ஒழுங்கை, மானிப்பாய். (53322)

## SPOKEN ENGLISH

வேலை பார்ப்பவர்க்கும், ஆசிரியர்க்குமான விசேட ஆங்கில வகுப்பு (சுலபமாக கதைக்கவும். மாணவர்க்கு சுலபமாக கற்பிப்பதற்குமான வகுப்புகள் 4 P.M, 6 P.M) ஆசிரியர் ந. விக்கி னவ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [53311]

## தவறிவிட்டது

கொடிகாமத்தைச் சேர்ந்த இராமநாதன் செந்தூரன் ஆகிய எனது அடையாள அட்டை (792722596V) கொழும்புத்துறைக்கும் யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோகிலா தேநீர்ச்சாலை, கொடிகாமம் என்றவிலாசத்தில் ஒப்படைத்துதவவும். [53308]

## சித்தாந்த பண்டிதர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த வருடம் மே மாதம் நடத்தப்பட்ட சித்தாந்த பண்டிதர் பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

செல்வி விமலரஞ்சினி மயில்வாகனம் இரண்டாம் பிரிவிலும், செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை, திருமதி சு. சிவாகரன் ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி சபையினரால் நடத்தப்பட்ட சித்தாந்த பிரவேச பண்டிதர், பால பண்டிதர் பரீட்சை முடிவுகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதாக தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

## வைத்திய சேவை

Dr க. சிவனடியான் கொழும்பில் இருந்து நிரந்தரமாய் திரும்பி வந்து விட்டார். தினசரி காலையும், மாலையும் நவாலியில் சிகிச்சை வளிக்கப்படும். (53185)

இம்மாதம் (2 முதல் 11 வரை) பயிற்சி பரீட்சை வினாத்தாள்களும் புலமைப் பரிசில் வினாத்தாள்களும் (14) பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**
யாழ்ப்பாணம்.
(53290)

# BRIGHT INSTITUTE

10, Fletchers Lane, Chundikuli

விலங்கியல்
துரித மீட்டல் தொடர் வகுப்புகள்


அலகு 7 மனித உயிரியல்

ஆரம்பம்: 14-02-98
சனிக்கிழமை 4 P.M.

ஆசிரியர் திரு. M. M. அல்போன்ஸ்
B.Sc (Ceylon)

(53317)

# முதலாண்டு நினைவலைகள்



| புவியின் மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 16 | 24 |
| 11 | 01 |
| 1932 | 1997 |

## திருமதி கமலாம்பிகை நாகமித்திரன்

திதி: 12 — 02 — 1998

''பொன்னை இழந்தாலும்போகட்டும் என்றிருப்போம்
கண்ணை இழந்தாலும் காலத்தை நொந்திருப்போம்
மண்ணை இழந்தாலும் மனமது தேறிடுவோம்
அன்னை உம்மை இழந்ததனால் அன்புக்காய்
ஏங்குகிறோம்''

அன்புக்கணவன்,
பாசமிகு மகள், மகன்மார்,
நேசமிகு மருமக்கள்,
அருமைப் பேரன்,

''ஸ்ரீராம்''
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(53208)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி பூமணி நடேசன் (பூமலர் ரீச்சர்)

பயணத்தை தொடர்ந்தது: 24 — 07 — 1934
பயணத்தை முடித்தது: 24 — 01 — 1997

திதி: 12 - 02 - 1998

எல்லாம் முடிந்த முடிவு. ஒருவராலும் மாற்றி அமைக்க முடியாது நான் சந்தோஷமாகவே இறக்கிறேன். ஏதோ வந்தேன்! கண்டேன்! பயணத்தை முடிக்க சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். கவலைப் பட வேண்டாம். எல்லாவற்றையும் சந்தோஷமாகவே ஏற்க வேண்டும். என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துக்கள்! நன்றி!!

— அமரரின் கடைசி வார்த்தைகள் —

என்றுமே உங்கள் வார்த்தைகள் எங்கள் மனதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

தாயே! நாம் இன்று உங்கள் பிரிவால் துயரம் என்னும் கடலில் சங்கமமாகித் தவிக்கிறோம்!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பூ அகம்,
மீசாலை மேற்கு,
மீசாலை.

[53278]

# கண்டியில் சாரணர் ஜம்போறி

தென்மராட்சி, பெப். 12

இலங்கை சாரணர்களின் ஐந்தாவது ஜம்போறி நிகழ்வுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கண்டியில் நடைபெறவுள்ளன.

இந்த ஜம்போறியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சாரணர்கள், சாரண தலைவர்கள், சாரண உத்தியோகத்தர்கள் அடங்கிய 70 பேர் பங்கு பெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்க செயலாளர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-117)

உ

# வைதீக வகுப்புகள் ஆரம்பம்

இடம்: இணுவில், சிவகாமி அம்மன் கோயில்
காலம்: 12-02-1998 வியாழக்கிழமை (இன்று)
மாலை 2 மணி (பழைய நேரம்)

ஆசிரியர்கள்:
சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக்குருக்கள் (மயிலணி)
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (இணுவில்)

மேற்படி வகுப்புகளில் பூர்வ — அபரக் கிரிகைகளின் வேத மந்திரங்களும், செயன்முறைகளும் கற்பிக்கப்படும். ஆர்வமுள்ள அந்தணர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சுபமஸ்து

பிராமண இளைஞர் சமாஜம்,
உரும்பிராய்.
(53320)

உங்கள் கடவுச் சீட்டுக்குரிய
(COMPUTERISED)
கலர் புகைப் படங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்:

# THE JAFFNA STUDIO

MAIN STREET,
BASTIANPILLAI JUNCTION,
JAFFNA.

(53316)

வெளிவந்து விட்டது!
விற்பனையாகின்றது!

# செய்முறைப் புவியியல் I

(A/L, GAQ B. A. உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்காக எழுதப்பட்டுள்ளது)

ஆசிரியர் S. T. B. இராஜேஸ்வரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் 1 புவியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- ★ அளவுத்திட்டம்
- ★ படங்களைப் பெருப்பித்தல் சிறுப்பித்தல்
- ★ பரப்புக்கணிப்பிடல்
- ★ தரைத்தோற்ற அம்சங்கள்
- ★ சாய்வு ஆய்வுகள்
- ★ வலைப்பின்னல் ஆய்வுகள்
- ★ இடஞ்சார்கோல அளவீடுகள்
- ★ நில அளவை

விலை 350/

கிடைக்குமிடம்;
ஆசிரியர்,
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
காலி வீதி, வெள்ளவத்தை- கொழும்பு - 6
கொட்டாஞ்சேனை- கொழும்பு - 13

(சி-2861)

''நன்றே கற்போம் நலமே வாழ்வோம்''

யா/ஊர். புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

# 125 ஆவது ஆண்டு நிறைவுவிழா அழைப்பு

நாள்: நாளை 13 - 02 - 1998
வெள்ளிக்கிழமை.

நேரம்: காலை 10.00 மணி (புதிய நேரம்)
இடம்: பாடசாலை மண்டபம்

பிரதம விருந்தினர்:
பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம்
(யாழ். ஆயர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. D. R. அருமைநாயகம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆங்கிலம்)
அருட்சகோதரி சோபியா பஸ்தியாமபிள்ளை
(மாகாணத் தலைவி)

இன்று 12 - 02 - 98 காலை 9.30 மணிக்கு நன்றித் திருப்பலி நடைபெறும்.

எமது பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(53295) பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிற்கு ஒரு வார அவகாசம்!

வாஷிங்டன் பெப். 12
ஈராக்குடனான நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் இராஜதந்திர ரீதியான முயற்சிகள் ஒருவார காலத்தினுள் வெற்றியளிக்காது விட்டால் அந் நாட்டின் மீது கடும் குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஈராக் மீதான தாக்குதல் நடவடிக்கைக்கு — குறிப்பாக விமானத் தாக்குதலுக்கு — சவுதி அரேபியாவில் உள்ள அமெரிக்க விமானத் தளங்களே பிரதானமானவையாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால் தனது நாட்டில் உள்ள தளங்களைப் பயன்படுத்த சவுதி அரேபியா சம்மதிக்க மறுத்துள்ளது. இதனால் குவைத், பஹ்ரேய்ன் ஆகிய நாடுகளில் உள்ள தளங்களைப் பயன்படுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான படைகள் வளைகுடாவில் தயார் நிலையில் உள்ளன. வளைகுடாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் பிரதான கட்டளை அதிகாரியாகவும், தளபதியாகவும் ஜெனரல் அந்தனி சின்யா பணிபுரிகிறார். தற்போது வளைகுடாவில் உள்ள அமெரிக்கப் படைகளால் தமது இலக்கை விரைவாக அடைய முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. ஆயுதபரிசோதனை அதிகாரிகளுக்கு நிபந்தனையற்ற முறையில் பணியாற்ற ஈராக் அனுமதி வழங்க வேண்டும். அவர்கள் ஈராக்கில் சுதந்திரமாகப் பணியாற்ற அனுமதி வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளுக்கு இன்னும் ஒருவார காலத்தில் ஈராக் இணங்க மறுத்தால் அதன் மீது கடுமையாகக் குண்டுமாரி பொழியப்படும் என்று அமெரிக்கா கடைசியாக எச்சரித்துள்ளது. (ஐ)

## ஆப்கன் பூகம்பம்; 3 ஆயிரத்து 800 சடலங்கள் அடக்கம்

காபூல், பெப். 12
ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் கொல்லப்பட்டவர்களில் 3 ஆயிரத்து 800 பேரின்சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## நச்சுவாயு முகமூடி பலஸ்தீனமும் கேட்கிறது

இஸ்ரேலை நோக்கி ஈராக் ஏவுகணைகளை ஏவ முற்படும் போது அவை இடையிலே பலஸ்தீனத்தில் விழ நேர்ந்தால் அதனை எதிர்கொள்ள நச்சு வாயு முகமூடிகள், மருந்துப் பொருள்கள், மருத்துத் தளபாடங்கள் ஆகியவற்றை உடனடியாகத் தந்துதவுமாறு பலஸ்தீன நாடாளுமன்றம் அமெரிக்காவிடம் கேட்டுள்ளது.

ஈராக்கை அமெரிக்கா தாக்குமானால் ஈராக் பதிலடியாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

1991 வளைகுடா யுத்தத்தின் போதும் இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இருந்தது. பதிலடி கொடுத்து நிலைமையை மேலும் சிக்கலாக்க வேண்டாம் என்று அமெரிக்கா அப்பொழுது இஸ்ரேலைக் கேட்டிருந்தது. (இ-9)

# படுகொலை முயற்சியில் இருந்து ஜோர்ஜிய அதிபர் தப்பினார்!

### அவரது வாகன அணி மீது றொக்கற் தாக்குதல்

ரிபிலிசி, பெப். 12
முன்னாள் சோவியத் யூனியன் நாடான ஜோர்ஜியாவின் அந்நாட்டு அதிபர் எட்வேர்ட் செவனார்ட்சே மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சியில் இருந்து

உலக அரங்கில்

அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

தலைநகர் ரிபிலிசியில் அதிபரின் வாகனத் தொடரணி சென்று கொண்டிருந்த போது இனந்தெரியாத ஆயுதபாணிகள் துப்பாக்கிகள் மற்றும் எறிகணைகளால் தாக்குதல் நடத்தினர். அதிபரின் பாதுகாப்புப்படையினருக்கும் ஆயுதபாணிகளுக்கும் இடையே சிறிது நேரம் இடம் பெற்ற மோதலில் அதிபரின் மெய்க்காவலர்கள் இருவர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்தியோரில் ஒருவரும் பலியானார். பலருக்கு காயம் ஏற்பட்டது. ஆனால் அதிபர் செவனார்ட்சே காயம் எதுவும் இன்றித் தப்பினார்.

சம்பவம் இடம் பெற்ற சிறிது நேரத்தில் அவர் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். தமக்கு ஆபத்து எதுவும் இல்லை என்றும், ஆண்டவன் கிருபையால் தாம் நலமே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் சோவியத் யூனியனின் வெளிவிவகார அமைச்சராக விளங்கிய செவனார்ட்சே முன்னாள் அதிபர் மிகைல் கொபர்ச்சேவின் வலதுகரமாகத் திகழ்ந்தார். ஜோர்ஜியாவில் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். (ஐ-7)

# 10 ஆயிரம் தொழிலாளர்கள் மலேசியாவில் வேலை இழப்பு

### கடுமையான பொருளாதார நெருக்கடி

சிங்கப்பூர், பெப். 12
மலேசியாவில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடியால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அண்மைக்காலத்தில் தமது வேலைகளை இழந்துள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் சுமார் ஐயாயிரம் பேர் வேலை இழந்தனர். வேலை இழந்த பலர் அதிகாரிகளிடம் இதுபற்றித் தெரிவிக்காததால் அவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என நம்பப்படுகிறது. (இ-9)


## நினைவஞ்சலி

180 ஆம் நாள் | 91 ஆம் நாள்



அம்பலம் கனகலிங்கம்
(தம்பாட்டி-ஊர்காவற்றுறை)
மலர்வு: 16 - 08 - 1949
உதிர்வு: 10 - 09 - 1997



ஜேக்கப் யோகராசா
(தம்பாட்டி-ஊர்காவற்றுறை)
மலர்வு: 03 - 12 - 1966
உதிர்வு: 14 - 11 - 1997

இவர்களின் ஆத்மா சாந்தியடைய
இன்றைய நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது குடும்பத் தலைவர்களின் பிரிவின் போது பல வழிகளில் உதவியோர்களுக்கும் அவர்களின் மரணச் சடங்குகளில் பங்குபற்றி எம்மைக் கௌரவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அத்துடன் இன்று 12 - 02 - 1998 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

(53318)



## லூர்துமலை மாதாதிருநாள்

மாதகல்

★ 14. 02. 1998 சனிக்கிழமை

மாலை 4 00 மணிக்கு திருச்சுரூப பவனி புனித தோமையார் ஆலயத்திலிருந்து புறப்பட்டு மாலை 5.00 மணிக்கு திருப்பலியும் நற்கருணை வழிபாடும் இடம் பெறும்.

★ 15.02 1998 ஞாயிற்றுக்கிழமை

காலை 7.30 மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலியும், திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெறும்.

பங்குத்தந்தையும், பங்கு மக்களும்,

புனித தோமையார் ஆலயம்,
மாதகல்.

(53328)



## ★ மலிவு விலையில் ★

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

# லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலண்டர்களை கொழும்பு விலையிலும் 15 வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

## கொழும்பு விலை 100 ரூபா

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ன் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையை அடகு வைத்த தந்தை தலை மறைவு!

### வடமராட்சியில் சம்பவம்

நெல்லியடி, பெப். 12

2 ஆயிரம் ரூபா பணத்திற்காக, தனது பெண் குழந்தையை அடகு வைத்த தந்தை ஒருவர் தலைமறைவாகியுள்ளார். குழந்தையை நெல்லியடி பொலிஸார் மீட்டு, தாயிடம் ஒப்படைத்துள்ளனர்.

துன்னாலை மேற்கில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று, மிட்டாய் வாங்கித் தருகிறேன் என்று கூறித் தனது 4 வயதுக் குழந்தையைக் கூட்டிச் சென்ற தந்தை, கரவெட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் உள்ளவர்களிடம் அக்குழந்தையை ஒப்படைத்து விட்டு அங்கிருந்து 2 ஆயிரம் ரூபா பணத்தை வாங்கிக் கொண்டு தலைமறைவானார்.

கடைக்குச் சென்ற கணவனையும் குழந்தையும் தேடிய மனைவி, பல நாள்கள் அலைந்து திரிந்தபின் பின்னர் கடந்த திங்கட் கிழமை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி யூ. டி. எச். ஜயநாத் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதலின் போது, அக்குழந்தை, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு அருகிலுள்ள வீட்டிலிருந்து மீட்கப்பட்டு, பெற்றதாயிடம் ஒப்படைக்கப்பட்டது.

குழந்தையை அடகு வைத்த தந்தையை நெல்லியடி பொலிஸார் தேடிவருகின்றனர். (ஐ-109)

## திருநெல்வேலி மயானத்தை புனரமைக்கக் கோரிக்கை

திருநெல்வேலி, பெப். 12

திருநெல்வேலிஇந்துமயானத்தைப் புனரமைத்துத்தருமாறு திருநெல்வேலி இந்துமயான அபிவிருத்திச் சங்கம் நல்லூர் பிரதேச சபை விசேட ஆணையாளரை கடித மூலம் கேட்டுள்ளது.

கடந்த 1995 இல் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இந்த மயானம் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சேதங்களை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இக் கடிதத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கமும் இந்த மயானத்தை சீர்திருத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

### கெயர் உதவி

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்று வரும் குறுகிய கால விவசாயப்பயிற்சி நெறிக்கு'' உதவும் வகையில் கெயர் நிறுவனம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜெனரேற்றர் ஒன்றையும், 4 நீர்இறைக்கும் இயந்திரங்களையும் வழங்கியுள்ளது. (இ-7)

## தொழிலாளர் போராட்டம்; ரெலோ முழு ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை முன்வைத்து நடத்திவரும் போராட்டத்திற்கு முழு ஆதரவு வழங்குவதாக தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கையின் மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டம் சர்வதேச பாட்டாளி மக்களின் சமூக விடுதலைக்கான போராட்டத்தின் பிரிக்க முடியாத அம்சமெனக் கருதும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழு மலையகப் பாட்டாளி மக்களின் போராட்டத்திற்கு தனது நிபந்தனையற்ற ஒத்துழைப்பையும், புரட்சிகர ஆதரவையும் வழங்க முன்வருகின்றது.

இன்று உலகிலேயே மிகவும் மோசமாக சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கையின் மலையகப் பாட்டாளி மக்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை மிகவும் நியாயமானதும், அவசியமானதுமான ஒன்றாகக் கருதும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நேரம் தாழ்த்தாமல் அப்பாட்டாளி மக்கள் கோரிக்கை எழுப்பும் சம்பள உயர்வை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசையும் சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 11

தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழன் பிற்பகல் ஒரு மணியளவில் அதிபர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அலுவலர் ஆ. கமலநாதன் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி ஈஸ்வரி கந்தையா மற்றும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட திட்டமிடல் உதவியாளர் க. தர்மேசன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர் [இ-7]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பாலசுப்பிரமணியம் விமலகாந்தன்
(குட்டி)

தாயின் மடியில் 28-1-83 | இறைவன் அடியில் 13 01-98

அருயிர் மகனே! நீ கண்ணீரில் கரைந்து விட்டாய்
வாழ வேண்டிய வயதில் நீ கானகம்சென்றுவிட்டாய்
காலம் செய்த கோலமிது! விதியின் விளையாட்டு!
ஓலமிட்டழுது என்ன பயன் மகனே?

தந்தை, தாய், சகோதரர்கள்.

நாகபூஷணி அம்மன் கோவிலடி,
உருப்பிராய் மேற்கு. (53327)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
செல்வன் இ. காந்தலிங்கம் (காந்தன்)
அவர்களின் தந்தையார்

சின்னையா இராசலிங்கம்

அவர்கள் 11-02-1998 அன்று சிவபதம் அடைந்ததை யிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

N.D.B.S. II வருட மாணவர்கள்
உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.

(49954)



# பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

## இடமாற்ற அறிவித்தல்

இலக்கம் 109, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
இன்று (12 - 02 - 1998) வியாழக்கிழமை முதல் இலக்கம் 104 (298),
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.



இன்று காலை 10.30 மணியளவில் புதிய முகவரியில் எமது ஸ்தாபனம்
ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.



## பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்

இல. 104, (298) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[ஐ-2863]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பாதுகாப்பில் சோடிப்பு

திருகோணமலை மாவட்டத்தில், தம்பலகாமம் பகுதியில் பொக்குறுணி என்ற கிராமத்தில் எட்டுப் பேர்களை, தமிழர்களை பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்று, அங்கு வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளனர் பொலிஸார்.

வீடு குடிபுகும் வைபவம் நடைபெற்ற வீட்டில், 'வீடியோ' படம் பார்ப்பதற்காக அங்கு இரவில் தங்கி நின்றவர்களை அதிகாலையில் அங்கு வந்த பொலிஸார் விசாரித்தனர். அதன் பின்னர் ஆறு பேர் பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். அருகிலிருந்த வீடு ஒன்றுக்குச் சென்று அங்கிருந்தும் இருவரைக் கூட்டிச் சென்றனர். எட்டுப் பேரையும் பொலிஸ் நிலையத்தில் வைத்தே சுட்டுக் கொன்றனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் என்றும், பொலிஸ் காவல் அரணைத் தாக்க வந்தவர்கள் என்றும் வழமையான "சோடிப்பு"க் கதையும் வெளியிடப்பட்டது.

எனினும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இறந்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பொலிஸாராலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற உண்மையை வெளியிட்டார். பொலிஸ் காவலரண் மீது நடைபெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் முயற்சிக்கும் கொலைச் சம்பவத்துக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழர்களைக் கொன்று விட்டு அவர்களைப் பயங்கரவாதிகள் எனப் பட்டம் கட்டுவதும், அதற்கேற்றவாறு கதைகளைச் சோடிப்பதும் படையினரைப் பொறுத்தவரையில் ஒன்றும் புதிய விடயம் அல்ல, பழமையது தான், பழக்கப்பட்டதுதான்.

அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றுவிட்டு பயங்கரவாதிகளைக் கொன்றதாகக் கதைகட்டுவது படை தரப்பில் அடிக்கடி இடம்பெறும் சோடனைகளாகும்.

தமிழர்களை எதுவும் செய்துவிட்டு எதையும் சொல்லி நியாயப்படுத்தி விடலாம் என்ற இத்தகைய நிலை திருகோணமலையில் மட்டுந்தான் உண்டு என்பதல்ல. இலங்கை முழுவதிலும் இதேநிலைமையே!

இத்தகைய பின்னணியில் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் தங்களைப் பாதுகாப்பர் என்று தமிழ் மக்கள் எவ்வாறு நம்புவர்? அந்த நம்பிக்கை அவர்களிடம் இருக்க வேண்டும் என்று அரசோ, பாதுகாப்பு உயர் அதிகாரிகளோ எந்த முகத்துடன் எதிர்பார்க்கமுடியும்?

சந்திரிகா அரசு பதவிக்கு வந்த பின்னரும் இத்தகைய சம்பவங்கள் பரவலாக நடைபெற்று வருகின்றன. அநியாயங்கள் மூடிமறைக்கப்பட்டு, சோடனை செய்யப்பட்டு நியாயப்படுத்தப்படுகின்றன.

ஆனால் அரசு இவற்றைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்ததாக அறிய முடியவில்லை. வெறும் விசாரணைகள் ஆகக் கூடியது வழக்குகளோடு முடிகின்றன. அதனால் இத்தகைய சம்பவங்கள் பெருகுகின்றன. அரசும் இதற்கு உடந்தையோ என்று தமிழ் மக்கள் சந்தேகிக்கிறார்கள்.

அரச பாதுகாப்புப் படைகள் தமிழர்களையும் இந்நாட்டுப் பிரஜைகளாகக் கருதிப் பாதுகாப்பளிக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனங்களில் துளிர்ப்பதற்கு இன்னும் நீண்ட காலம் செல்லுமாயின் —

தமிழர் மனங்களை வெல்லலாம், சமாதானத்தை உருவாக்கலாம், தனது நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டலாம் என்று அரசு நினைப்பது வெறும் பகற் கனவாகவே முடியும்!

# படையினருக்கான சம்பள உயர்வை ஜனவரியிலிருந்து வழங்க முடிவு

## ஏனையோருக்கு ஜூலை மாதமே கிடைக்கும்

கொழும்பு, பெப். 12

இந்த ஆண்டு ஜூலை மாதம் அரசாங்கத்திலுள்ள அதிகாரிகள் தரத்தைச்சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் சம்பள அதிகரிப்பு ஆயுதப்படை மற்றும் பொலிஸ் சேவையைச்சேர்ந்தவர்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படும்.

வருடாந்தம் 90 ஆயிரம் ரூபாவுக்கும் கூடுதலான சம்பளத்தைப் பெறும் அரசாங்க அதிகாரிகளுக்கு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் சம்பள அதிகரிப்பை வழங்குவதென அரசாங்கம் முடிவுசெய்திருந்தது.

எவ்வாறாயினும் ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸாருக்கு இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐக்கிய இலங்கையின் சார்பில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆயுதப் படையினரும் பொலிஸாரும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி இந்த யோசனையைத் தெரிவித்திருந்தார் என்று அரசு அறிவித்துள்ளது.

ஆயுதப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்படும் சம்பள முற்பணமும் 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் இது அமுலுக்கு வரும்.

தற்சமயம் அரசாங்க ஊழியருக்கு பண்டிகை முற்பணமாக ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுகிறது. (இ-8)

## குடும்பப் பெண் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 12

குருநகர் பகுதியில் உணவு நஞ்சாகியதன் விளைவாக இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிய வந்தது.

வீட்டில் சமைத்த திருக்கை மீன் கறியை இரவில் உண்டதால் மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-3)

## மாணவர் கணிப்பீட்டு திட்டம்

பருத்தித்துறை, பெப். 12

ஆண்டு 6 வகுப்பில் கல்வி கற்கும் சகல மாணவர்களின் பாடசாலை மட்டக் கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. இதன்படி ஜனவரி மாதத்திலிருந்து கணிப்பீட்டு முறை இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் வளம்படுத்துவதற்கு தொடர்ச்சியான மேற்பார்வை இடம் பெறவுள்ளதாக யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். [ஐ-118]

# ரத்வத்தயை பதவி விலகக் கேட்பது புலிகளுக்கு இடம் அளிப்பது ஆகும்

## மகாநாயக்கர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

"ஜெனரல் ரத்வத்தயைப் பதவி விலகும்படி கேட்பது படையினர் கைப்பற்றிய பிரதேசங்களைப் பொறுப்பேற்கும்படி புலிகளிடம் கேட்பதற்குச் சமன் ஆகும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது"

அஸ்கிரிய பீட மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய பலிப்பான ஸ்ரீ சந்தானந்த தேரர் இங்கள ஆராய்ச்சகர் சங்கிரதாயை ஸ்தாபனத்தின் தூதுக் குழு ஒன்றிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது:-

அரசாங்கத்தை அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தயை இராஜினாமாச் செய்யுமாறு கோருவது அரசாங்கம் எதிர்நோக்கும் தற்போதைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க உதவ மாட்டாது.

இந்த நெருக்கடிமிக்க நேரத்தில் அரசாங்கம் இராஜினாமாச் செய்வது புலிகளுக்கு மாத்திரமே உதவியாக அமையும்

நாட்டின் வடபகுதியிலுள்ள பகுதிகளை மீண்டும் கைப்பற்றிய பாதுகாப்புப் படைகளுக்கு ஜெனரல் ரத்வத்த வழிகாட்டலையும் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தார்.

ஜெனரல் ரத்வத்தையின் முயற்சியின் காரணமாக யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடி பறக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சாதாரண தமிழ் மக்களின் நல்லெண்ணத்தை வென்றெடுப்பதற்கும், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அமைச்சர் ரத்வத்த முயற்சி எடுத்து வந்துள்ளார்.

இப்படி அவர் கூறினார். (இ 8)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். வட்டவியோ கழகத்தினரால் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி. ப. 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ யாழ். பல்கலைக்கழக அணி எதிர் கலைவாணி அணி. (இ-3)

# புலிகளின் சடலங்கள் ஒப்படைக்கப்படாதது என்?

## படையினர் தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 12

இம்மாதம் முதலாம் திகதி கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதியில்இடம்பெற்ற சண்டையில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் சடலங்கள் புலிகளிடம் கையளிக்கப்படாததுக்கான காரணத்தை விளக்கி பலாலி இராணுவ தலைமையகம் பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெப்ரவரி முதலாம் திகதி கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு இராணுவ முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னர் சுமார் 200 விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. அந்தச் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க யாழ்ப்பாணத்தின் படைத் தளபதி முன்வந்தார். அந்த வேளையில் சடலங்கள் நல்ல நிலையிலேயே இருந்தன. சடலங்களைக் கையளிக்கும் முடிவு பெப்ரவரி முதலாம் திகதி நண்பகல் ஒரு மணிக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பெப்ரவரி இரண்டாம் திகதி காலை எட்டு மணிவரை விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அதன் பின்னர் சில நிபந்தனைகளுடன் அவர்களிடம் இருந்து பதில் கிடைத்தது. இது குறித்து பாதுகாப்புப் படையினர் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர் முழுமையாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

சடலங்கள் ஒப்படைக்கப் படுவதற்கு ஒரு மணித்தியாலம் முன்னரும் ஒரு மணித்தியாலம் பின்னரும், கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதிகளின் எல்லா இடங்களிலும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும்—

சடலங்களை பிற்பகல் 4.15 மணிக்குக் கையளிக்கலாம் என்றும்--பாதுகாப்புப் படையினர் ஆலோசனை தெரிவித்தனர்.

இது குறித்து எட்டு மணித்தியாலங்களின் பின்னர் பி.ப. 2 மணிக்கு எல்லா இடங்களிலும் தாக்குதலை நிறுத்துவதற்குத் தம்மால் இணங்க முடியாது என்றும், சடலங்கள் கையளிக்கப்படும் பகுதிகளில் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்றும் அறிவித்தனர்.

இத்தகைய நிலை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருக்கு ஆபத்தானதாக அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டு, முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு விடுதலைப் புலிகளிடம் கேட்கப்பட்டது. பிற்பகல் 5 மணியளவில் தங்கள் முடிவில் மாற்றமில்லை என்று அவர்களின் இறுதிப் பதில் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து, சடலங்களை ஒப்படைப்பதற்குப் படையினர் முன்வந்த 27மணித்தியாலங்களின் பின்னர், பி.ப. 5.05மணிக்கு சடலங்கள் பழுதடைந்து கொண்டிருப்பதாலும் வேறு மார்க்கம் இல்லாததாலும் சடலங்கள் தகனம் செய்யப்படும் என்று சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவினர் ஊடாக அறிவிக்கப்பட்டது.

எனினும் படைவீரர்களின் சடலங்களைக் கையளிக்க விடுதலைப் புலிகள் முன்வந்த போது, படையினர் உடனடியாக இணக்கம் தெரிவித்து சடலங்களை வவுனியாவில் கையேற்றனர். 41 படைவீரர்களின் சடலங்களில் 10 பேரின் சடலங்களை மட்டுமே இனங்காண முடிந்தது.

இதன் மூலம், விடுதலைப் புலிகளுக்கு தமது உறுப்பினர்களின் சடலங்களை பெற்றுக்கொள்வதில் அக்கறை இல்லை என்பது பூரணமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் ... தெரியும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

# ராணுவ முகாம் சமையற்காரர் கஞ்சா வைத்திருந்தாராம்!

## நீதிமன்றத்தில் ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 12

கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அக் குற்றத்தை ஒப்புக்கொண்டவருக்குத் தண்டப் பணமாக ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிபதியினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

காங்கேசன்துறை இராணுவ முகாமில் சமையற்காரராகக் கடமையாற்றிவந்த சிங்கவகே அமரசேனா என்பவரைக் கஞ்சாவுடன் கைதுசெய்த பொலிஸார் அவரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கை விசாரணை செய்த பதில் மாவட்ட நீதிபதி மு. சபாநாதன் முன் சம்பந்தப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டப் பணமாக ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-5)

## 15 பேருக்கு மட்டுமே அக்கறை!

கொழும்பு, பெப். 12

ஆண்டு -1க்கு மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பது தொடர்பாக தேசியக்கொள்கை ஒன்றை உருவாக்கும் நோக்கில தேசிய கல்வி ஆணைக்குழு பொதுமக்களின் கருத்தைக் கோரியிருந்தது — பொதுமக்கள் தரப்பிலிருந்து 15 பேர் மாத்திரமே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

பெற்றோர் தமது பிள்ளைகளைப் பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளனர் எனவும் தேசியக் கொள்கையை உருவாக்குவதில் அவர்கள் நாட்டம் கொள்ளவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது எனவும் தேசிய கல்வி ஆணைக்குழுப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-10)

## ஞாபகார்த்த கட்டடம்

திருநெல்வேலி, பெப். 12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமரர் முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக அறுபத்துமூவர் குருபூசை மண்டபம் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் ஆறாம் திகதிக்கு முன்னர் இதன் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## நாளை

**மாசி 1**

வெள்ளிக்கிழமை

திதி: துதியை
முன் இரவு 7.39 வரை.
நட்சத்திரம்: பூரம்
முன் இரவு 11.17 வரை.
சுபநேரம்: 6.34-8.04
ராகுகாலம்: 11.04-12.34
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணப் பொருள் குறைப்பால் வன்னியில் பட்டினிச் சாவு நிலை!

வவுனியா, பெப். 12

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கான நிவாரணப் பொருள் விநியோகம் 50 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

வன்னி மாவட்டத்துக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருள்கள் கடந்த மே மாதத்தில் இருந்து 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டதாகவும்— இதன் காரணமாக மக்கள் மாதத்தில் ஒரு தடவையே நிவாரணம் பெறுவதாகவும்—

இதனால் அவர்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்குவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலத்தில் பொது மக்கள் மாதத்தில் இரு தடவைகள் நிவாரண உதவிகளைப் பெற்று வந்தனர்.

## வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாதசாரியான வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிப்பகுதியைச் சேர்ந்த தி. பாலசுப்பிரமணியம் (வயது 72) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கலை நிகழ்ச்சி

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சி எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலை நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்கு பற்றும் நடனம், பேச்சு, நாடகம் என்பன இடம் பெறவுள்ளன. (இ-7)

## தொழிற்பயிற்சி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் ஊதுபத்தி, கற்பூரம், பன்னவேலை போன்றவற்றுக்கான தொழிற் பயிற்சிகளும், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சியும் நடத்தப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்க மட்டத்தில் இப்பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன. (இ-5)

## கிளிநொச்சி சம்பவங்களை வைத்து

# மக்கள் கவலையடையக்கூடாது என படை தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

''உங்களை மீண்டும் படுகுழியில் தள்ள நாங்கள் இடமளிக்கமாட்டோம்'' என்று தலைப்பிட்டு யாழ்ப்பாண பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

இந்தச் செய்திக் குறிப்பில் சில அம்சங்கள் நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியிருந்தன

அச் செய்திக் குறிப்பின் முழு விவரமும் வருமாறு:-

''பல வருடங்களாகத் துயரத்தின் மத்தியில் வசித்து வந்த யாழ். குடாநாட்டு மக்களே! தற்போது படிப்படியாக உங்களுடைய வாழ்க்கையில் ஒளி வீசத் தொடங்கியுள்ளது.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அதிகாலை கிளிநொச்சி பாதுகாப்பு முன்னரண்களுக்கும், பரந்தன், ஆனையிறவு பகுதிகளுக்கும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக முறியடித்து, விடுதலைப்புலிகளின் நூற்றுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொலை செய்துள்ளனர்.

இருந்தும் கிளிநொச்சி பாதுகாப்பு முன்னரணில் இருந்த படையினர் மட்டுமே தந்திரத்துடன் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் பின்னடைந்தனர். இதனால் கிளிநொச்சி நகரத்தையோ, பரந்தன், ஆனையிறவு பகுதியையோ விடுதலைப்புலிகளினால் கைப்பற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கிறோம்.

ஆகவே யாழ்ப்பாண பொதுமக்களே! நீங்கள் கவலைப்படவேண்டாம். மீண்டும் உங்களைப் படுகுழியில் தள்ள இடமளிக்க மாட்டோம்.

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சின்னையா

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா சின்னையா 11-02 98 இல் காலமானார்.

இவர் சின்னத்தம்பி மீனாட்சியின் கனிஷ்ட மகளும், காலஞ்சென்ற வே. நா. சின்னையாவின் மனைவியும், சுந்தரமூர்த்தி, நவரெத்தினம், காலஞ்சென்ற திருமதி உலகா நித்தியானந்தம், செல்வி கமலா சின்னையா, திருமதி ஞானம் விருத்தாசலம், யோகநாதன், பரமநாதன் (பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், க. நித்தியானந்தன் (வீரகேசரி), ந. விருத்தாசலம் (ஞானம் ரேட்ஸ், யாழ்ப்பாணம்), திருமதி கௌசல்யா நவரெத்தினம், திருமதி சகுந்தலா பரமநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கஷ்தனி, நிலானி (வீரகேசரி), வினோதினி, அருள்நம்பி, சுதாகரன், பிரபாகரன், நிசந்தினி, தர்சினி, தேவகரன் ஆகியோரின் அம்மம்மாவும், முருகதாசன், துளசிகா, சயந்திகா, பிரசாந், தனுசாந், கிருசாந் ஆகியோரின் அப்பம்மாவும், கடா விசாலாட்சி, வேதநாயகி, சிறிநாதன், சிறிகாந்தன், ராஸ்மி, காந்திமதி, சசிகலா, றஜனி ஆகியோரின் குஞ்சியாச்சியும், அனுசனின் அன்புப பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-02-98) வியாழக்கிழமை 29/1, செட்டித் தெரு நல்லூர், இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. பரமநாதன் (மகன்)
சி. கமலா (மகள்)

29/1, செட்டித் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/2868)

## தம்பலகமம் படுகொலைகள்

# 4 பேர் அடையாளம் காட்டப்பட்டனர்

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம், பாரதிபுரத்தில் 8 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளவர்களில் சப் இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பேர் நேற்று அடையாளம் காட்டப்பட்டனர்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் பதில் நீதிபதி திருமதி சுபாஜினி வரதன் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நேற்று நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள றிசேர்வ் பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜண்ட், 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள், 5 ஊர்காவலர் நேற்று அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர்.

சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்த 24 பேரும் றிசேர்வ் பொலிஸ் இன்ஸ்பெக்டரையும், 3 ஊர்காவலர்களையும் அடையாளம் காட்டினர்

இதையடுத்து வழக்கு விசாரணை இன்று ஒத்திவைக்கப்பட்டது. (இ-8)

## கல்வியியல் துறையில் கலாநிதி பட்டம்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் த. கலாமணி ஆஸ்திரேலியப் பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெற்று கல்வியியல் துறையில் கலாநிதி பட்டம் பெறுவதற்காக ஆஸ்திரேலியா பயணமானார்.

நீண்டகால இடைவெளியின் பின் கல்வியியல்துறையில் ஒருவர் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு செல்வது குறிப்பிடத்தக்கது.

இவர் பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியும் யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல் டிப்ளோமா பட்டதாரியும் ஆவார்.

ஆஸ்திரேலியாவில் நான்கு வருடங்களுக்கு தனது புலமைப் பரிசில் கல்வியைத் தொடரவுள்ள இவர் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கனகராயன்...

(முதலாம் பக்கத் தொடர்)

குளத்தின் வடபகுதியில் 3 புலிகளைச் சுட்டுக் கொன்றனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்தது.

கொல்லப்பட்டவர்களில் இருவர் பெண்கள் என்றும்— அவர்களிடம் இருந்து ரீ-56 ரக துப்பாக்கிகள், வானொலிக் கருவி ஆகியவற்றைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் மோட்டார் தாக்குதலை முறியடிப்பதற்கு விமானப்படை விமானங்களும் மற்றும் பீரங்கிகளும் பயன்படுத்தப் பட்டதாகவும் கூறப்பட்டது. [இ-8 3]

## 20 ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்)

சுதந்திர தின பொன் விழாவை யொட்டி ஜனாதிபதியால் இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

படையிலிருந்து விலகிச் சென்றோரை மீண்டும் வந்து இணையுமாறு ஜனாதிபதி சமீபத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே. (இ-21)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரஸ்தாப இராணுவக் கப்டன் எவராலும் நிர்ப்பந்திக்கப்படவில்லை என்றும் தாமாக முன்வந்தே விடுதலைப் புலிகளுக்கு இச்சேவையைச் செய்து வருகின்றார் என்றும் பெண் உறுப்பினர் மேலும் கூறியிருக்கின்றார்.

1996 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் நடத்திய முல்லைத் தீவுத் தாக்குதலின் போது 120 மில்லிமீற்றர் மற்றும் 122 மில்லி மீற்றர் ஆட்லறிகளைப் பெரும் எண்ணிக்கையில் கைப்பற்றியிருந்தனர். அதன் பின்னர் நடந்த சண்டைகளில் இந்த ஆட்லறிகளே இராணுவத்தினருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில காலமாக தங்களுக்கு எதிராக ஏவப்படும் ஆட்லறிகள் முன்னாள் இராணுவக் கப்டனாலேயே இயக்கப்படுகின்றன என்று படை வட்டாரங்கள் சந்தேகம் கொண்டிருந்தன. இப்போது தங்களுடை சந்தேகம் விடுதலைப் புலி பெண் உறுப்பினர் கொடுத்த தகவலின்படி ஊர்ஜிதமாகியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போது விடுதலைப் புலிகளுடன் இருந்து இராணுவத்துக்கு எதிராக ஆட்லறிகளை ஏவி வரும் முன்னாள் இராணுவக் கப்டன் முல்லைத்தீவு தாக்குதலின் போது காணாமல் போன 20க்கும் மேற்பட்ட அதிகாரிகளில் ஒருவர் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

இத்தகவல்களைக் கொழும்பில் இருந்து வெளிவரும் டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

# பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சரண்

திருகோணமலை, பெப். 12

திருகோணமலை தம்பலகமம் பாரதி புரத்தில் 8 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டு வந்த பாரதிபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ரணராஜா நேற்று நீதிமன்றத்தில் சரண் அடைந்தார்.

திருகோணமலை நீதிபதி பி. சொர்ணராஜ் முன் நேற்று மாலை அவர் சரண் அடைந்தார். (இ-3)

# சத்தியாக்கிரகம், பேரணிகள் மலையகத்தில் தொடர்கின்றன

## 5 ஆயிரம் பேர் நேற்று உண்ணாவிரதம்

கொழும்பு, பெப். 12

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரி மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக மலையகம் எங்கும் ஆர்ப்பாட்டப்பேரணிகளும், சத்தியாக்கிரகங்களும் நடைபெற்றுவருகின்றன.

மலையக மக்கள் முன்னணியின் ஆதரவுடன் இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தலவாக்கொல்ல முருகன் ஆலயம் முன்பாக நேற்று நடந்த உண்ணா விரதத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

அதற்கு முன்னர் மஸ்கெலியா, டிக்கோயா போன்ற இடங்களிலும் இப்போராட்டம் இடம்பெற்றது.

## மலையக வேலை நிறுத்தம்

# தொழிற்சங்கங்களுடன் ஜனாதிபதி இன்று பேசுவார்

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கோரி மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று தொழிற்சங்கங்களுடன் தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

கடந்த ஒரு வாரமாகத் தொடரும் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை முடிவுக்கு கொண்டு வரும்வகையில் இன்று ஜனாதிபதி பல சுற்றுப் பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் நாளை வேலை நிறுத்தம் முடிவுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## தமிழ் சட்டத்தரணி...

(முதலாம் பக்கத் தொடர்)

சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணி செல்லத்துரை செல்லகுணபாலன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

நேற்று கொழும்பு கோட்டை பதில் நீதிவான் பாலித வியனகே முன் ஆஜர் செய்யப்பட்டு சரீரப் பிணையில் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது சமுகமளித்திருந்த சகல தமிழ் சட்டத்தரணிகளும் அவருக்காக வாதாடினார்கள். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org